# 05 வளங்களும் பொறுப்புள்ள மனுக்குலமும்

**வாசிப்போம்**

*எசாயா 45:8-12*
*சபைஉரையாளர் 7:29*
*தொடக்கநூல் 11: 1-9*
*உரோமையர் 8:18-25*


இயற்கை வளங்கள், நாம் வாழும் சூழலிருந்து நமக்கு கிடைக்கின்றன. புவி வளங்கள் யாவற்றையும் படைத்தவர் கடவுளே. அவற்றைப் பராமரிப்பவரும் கடவுளே.

## வளங்கள் மனுக்குல வாழ்வின் உயர்வுக்கு வழங்கப்பட்டன

புவி வளங்களை நாம் நேரடியாகப் பாவிக்கிறோம். அத்துடன், இவ்வளங்களைப் பாவித்து நாம் வாழ்வதற்கு அவசியமான பல பொருட்களையும் தயாரிக்கிறோம். நீர், நிலம், வளி, காடுகள், உயிரினங்கள் மற்றும் நிலத்திலிருந்து பெறும் உலோக வகைகள், காரீயம், கனியஎண்ணெய் ஆகிய யாவும் இயற்கை வளங்களே ஆகும். இவ்வளங்கள் எல்லாவற்றையும், மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக கடவுள் வழங்கியுள்ளார்.

*வானங்கள், பனி மழையென வெற்றியை அனுப்பட்டும். மேகங்கள் மாரியென அதைப் பொழியட்டும். அதனுடன் நீதி துளிர்க்கச் செய்யட்டும்: இவற்றைச் செய்பவர் ஆண்டவராகிய நானே. . . நான் உலகை உருவாக்கி அதன்மேல் மனிதரைப் படைத்தேன். என் கைகளே வானத்தை விரித்தன: அவர் படைத்திரளுக்கு ஆணையிட்டதும் நானே.*

*எசாயா 45:8-12*





இலவச விநியோகத்திற்காக

## மனுக்குலத்தின் வளப் பாவனை

கடவுளால் படைக்கப்பட்ட, வளங்களை இறைவிருப்பத்திற்கு ஏற்ப பாவித்து, பாதுகாத்து, பராமரிக்க வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பாய் இருக்கிறது.

மனுக்குலமோ சுயநலத்துடன் தம் பொருளாதார விருத்தியை மாத்திரம் நோக்காகக் கொண்டு, வளங்களை மிதமிஞ்சிப் பாவித்து உச்ச பயனைப் பெற முயலுகின்றது.

வளங்களை வீண்விரயம் செய்வதாலும், பொறுப்பற்ற முறையில் பாவிப்பதாலும், மனுக்குலம் வளப் பற்றாக் குறைக்கும், தொடர்ந்து வரும் சூழல் பிரச்சனைக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது,



சில வளங்கள், மீளப் புதுப்பிக்க முடியாத வளங்கள் ஆகும். மனுக்குலம் அவற்றை நுகரும் அளவில் அவை மீண்டும் உருவாகுவது இல்லை. ஆகவே, மனுக்குலம் சுய இலாபத்தைத் தேடி, வள விரயம் செய்வதை தவிர்க்க, தமது வாழ்க்கை முறையை சீர்திருத்தம் செய்தல் வேண்டும். தேவையற்ற வள விரயம் மனுகுலத்தை பாதிக்கிறது.

அநேக செல்வந்தர் தம் வாழ்க்கை முறையை எளிமையாக்கி, வளப்பாவனையைக் குறைக்க முன்வருவதில்லை. அரசாங்கங்களும் தமது நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முனைகின்றன. முதலீட்டாளரின் உயர் வளப்பாவனை, சூழல் கேட்டுக்கு வழிவகுக்கின்றது. அத்தோடு, சூழலியளாளர், முதலீட்டாளர், அப்பிரதேசத்து வாசிகள் ஆகியோருக்கிடையே முரண்பாடுகளும் ஏற்படுகின்றன.

எனவே, மனுக்குல நன்மைக்காக உலக வளங்கள் சுயநலமற்ற முறையில் அனைவருடனும், பகிர்ந்து பாவித்தல் வேண்டும். இன்று நாம் வளங்களைப் பாவிக்கும் முறையானது, எதிர்காலத்தைப் பாதிக்காத வண்ணம், கடவுளின் விருப்பை நிறைவேற்றுவதாக அமைதல் வேண்டும்.

## இறைவிருப்புக்கு எதிரான வளப் பாவிப்பு அழிவை ஏற்படுத்துகிறது

"கடவுள் மனிதரை நேர்மையுள்ளவராகவே படைத்தார்: ஆனால்,வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக்கொண்டவையே." சபை உரையாளர் 7:29

புவியின் அபிவிருத்திக்கும், ஆக்கத் தொழிற்பாட்டுக்கும், வளங்களைப் பயன்படுத்த வேண்டிய மனுக்குலம், இறைதிட்டத்திற்கு மாறாக, நீதி நெறிக்குப் புறம்பான முறையில், அழிவுக்குப் பயன்படும் அணுகுண்டுகளைத் தயாரிக்கின்றனர். சுயபெருமையை பறைசாற்றும் நோக்குடன் நாட்டுக்கு நாடு, பலப்பரீட்சையில் ஈடுபட்டு, போட்டி மனப்பான்மையுடன், ஏவுகணைகளைத் தயாரிக்கின்றனர். இவற்றை நிலத்திலும், கடலினடியிலும் பரிசோதிப்பதால், அச்சூழல்களும் அங்கு வாழும் உயிரங்கிகளும் பல அழிவுகளை எதிர்கொள்கின்றன. மனுக்குலமும் அழிவை நோக்கிச் செல்கிறது. வளங்களை இறைவிருப்பத்திற்கும் திட்டத்திற்கும் எதிராகப் பாவித்தல் அழிவையே உண்டாக்கும்.

## தற்பெருமையை வெளிக்காட்டும் நடவடிக்கையின் விளைவு

தற்பெருமையை வெளிக்காட்டும் எந்தவொரு நடவடிக்கையும் கடவுளின் சித்தத்திற்கு ஒவ்வாததும் மனுக்குலத்திற்கு நன்மையளிக்காத செயற்பாடுமாகும். தற்பெருமை “பாபேல் கோபுரம்” கட்டப்பட்ட நிகழ்ச்சி சிறந்த உதாரணமாகும்.

வாருங்கள்.... வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காக கட்டி எழுப்பி நமது பெயரை நிலைநாட்டுவோம். ... . . . ஆண்டவர் அவர்களை அங்கிருந்து உலகம் முழுவதிலும் சிதறுண்டு போகச் செய்ததால், அவர்கள் நகரைத் தொடர்ந்து கட்டுவதைக் கைவிட்டனர். தொடக்கநூல் 11: 1-9



பாபேல் கோபுரம்




இலவச விநியோகத்திற்காக

தற்பெருமை கடவுளின் இராச்சியப் பிரசைகளின் குணாதிசயம் அல்ல. பெருமையை வெளிக்காட்ட முன்னெடுக்கப்படும் மனுக்குலத்திட்டத்தை கடவுள் சீர்குலைத்தார். இவ்வாறே இறையரசு விழுமியங்களுக்கும் இறை திட்டத்திற்கும் எதிராக சுயபெருமைக்காக மேற்கொள்ளப்படும் எந்த வளப்பாவிப்பும் நன்மையைத் தராது.

## படைப்பு முழு நிறைவடைதல் கடவுளின் சித்தமாகும்.

> படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது. தானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை. அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று; எனினும் அது எதிர்நோக்கை இழந்த நிலையில் இல்லை. அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும், விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது,
>
> உரோமையர் 8:18-25

வளங்கள் முழு நிறைவை அடைய கடவுள் ஆசீர்வதிக்கிறார். கடவுள் படைத்த வளங்கள் திரும்பவும் முழு நிறைவை அடைய மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு, மனுக்குலம் முழு ஒத்தாசை வழங்கி உதவ முன்வரவேண்டும். இத்திட்டங்களுக்கு எதிர்த்து நிற்பதும் , தடையாக இருப்பதும் இறைவிருப்புச் செயலாக அமையாது. வளப்பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்கள், இயங்கங்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் பணியுடன் இணைந்து செயல்படல் மிக முக்கியமானதாகும். இன்றைய வளப்பாவனை முறை எதிர்காலத்தை பாதிக்காத வண்ணம், அழிந்து செல்லும் வளங்களைப் பற்றியும் அழிவைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் மனுக்குலத்திற்கு அறிவித்து விழிப்பூட்டல் அவசியம்.


வளஅழிவை
ஏற்படுத்தும் நமது
சுயநலச்
செயற்பாடுகளைப் பற்றி
மீளச் சிந்திப்போம்.
Rethink
வள
மீளாக்கத்திற்கு
இடமளிப்போம்.
Restore
வளங்களின்
சுயநலமான
அதிக பாவனையைக்
குறைப்போம்.
Reduce
வளங்கள் முழு
நிறைவடையச்
செயல்படுவோம்
6R
வளங்களையும்
மனுக்குலத்தையும்
மதித்து
நடப்போம்.
Respect
வளங்களை பல
தடவைகள் மீளப்
பாவிப்போம்.
Reuse
வளங்களை
மீள்சுழற்சி
செய்வோம்.
Recycle

## எது சரியெனத் தீர்மானிப்போம்



புவி நம்முடையது. நமக்கு கடவுள் அதனை அளித்துள் ளார். நாம் நமக்கு விரும்பியவாறு அதனைப் பயன் படுத்துவோம்.

ஆனால் புவி உங்கள் சொந்தமானது அல்லவே. நீங்கள் அதனைப் பராமரிக்கும் பொறுப்புப் பணியாளர் மாத்தி ரமே. "நிலம் என்னுடையது; நீங்களோ என்னைப் பொறுத்த வரையில் அந்நியரும் இரவற் குடிகளுமே"

*லேவியர் 25:23*





மனிதர்,சமையலுக்குத் தேவையான எரிபொருள் கிடைக்காத விடத்து, காட்டு மரங்களை வெட்டி விறகாகப் பாவிப்பது நியாயமானதே!

மனுக்குல நன்மைக்காக உலக வளங்களை அனைவருடனும் பகிர்ந்து சுயநலமற்ற முறையில் பாவிக்க வேண்டும். இது நம்மைப்போல நாம் பிறனை நேசிக்கும் செயல்பாடாகும். சூழலை மாசுபடுத்தாமல் , சக்தித்தேவையைப் பெறும் பொருட்டு இயற்கை வளங்களான ஆறு, வீசும் காற்று, கடலலை,சூரியனையும் கடவுள் படைத்துள்ளாரே!




என்னையும் எனது
குடும்பத்தவர்களையும்
கடவுள் ஆசீர்வதித்துள்ளார்.
என் குடும்பஅங்கத்தவர்கள்
தனித்தனி வாகனங்களில்
வேலைக்கு மிகச் சொகுசா
கவும், வசதியாகவும்
செல்கிறார்கள்.



கனியெண்ணை ஒரு வளமாகும். மனுக்குலம் கடவுள் தந்திருக்கும் வளங்களை நன்மையான விதத்தில் சுயநலம் பாராமல் பாவிப்பது முக்கியம். பொதுப் போக்குவரத்தைப் பாவிப்பதால் வளப்பற்றாக்குறை ஏற்படுவதையும், சூழல் மாசடைவதையும் தடுக்கலாம். கடவுள் நம்மிடம் இதனை எதிர்பார்க்கிறார்.



யானைகளின் தொல்லை தாங்க முடிவதில்லை. அத்துடன் யானைத் தந்தத்தை நல்ல விலைக்கு விற்கமுடியும். யானைகளைக் கொன்று போடுவதால் பிரச்சனைகள் எளிதாகின்றது.






எல்லாப் படைப்புக்களும் கடவுளுக்குச் சொந்தமானது. கிறிஸ்து சிந்திய இரத்தம் விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்குகின்றது. (கொலோசயர் 1:20)

கடவுள், மனுக்குலம் விலங்குகளைப் பாதுகாத்துப் பராமரித்து தொடர்விருத்தியில் பங்குகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறார். அநாவசியமான வள அழிவுகள் நிறுத்தப்பட வேண்டும்.




எனது தொழிற்சாலையில், நவீன தொழிநுட்பத்தால் உற்பத்தி நடைபெறுகிறது. நாட்டுப் பொருளாதாரத்தை விருத்தி செய்ய நான் பங்களிப்பதில் பெருமைப்படுகிறேன். ஆனாலும் புகைபோக்கிகளிலிருந்து வெளிவரும் புகையால் அப்பகுதி மக்களிடம் எதிர்ப்பை நோக்கவேண்டியுள்ளமை வருத்தத்திற்குரியது.

நாம் கடவுளை நேசிப்பதுடன் கடவுள் நேசிப்பவற்றை நாமும் நேசிப்பது கடவுளின் அன்புக்கட்டளையாகும். மனிதரின் சுகநலத்திற்கு கேடு உண்டாக்கும் நச்சுப் புகையை வெளியனுப்புவது, கடவுள் நேசிக்கும் மனிதரை நாம் நேசிக்கும் செயல் அல்ல. இறையாட்சி விழுமியத்திற்கு எதிரான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலும் நன்மை தராது. சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பம் சூழலை மாசுபடுத்தாது.





## தீர்மானிப்போம்

- வளங்களைப் பொறுப்புடன் பராமரிப்போம்.
- வளங்களின் தேவை, பாதுகாப்பு தொடர்பாக சமூக விழிப்புணர்வுப் பணியில் ஈடுபடுவோம்.
- வளங்களை சுயநல நோக்குடன் பாவித்து அழிப்போரை எச்சரித்துத் தடுப்போம்.



## நினைவில் வைத்திருப்போம்

- கடவுள் மனுக்குல வாழ்வின் மேம்பாட்டிற்கு வளங்களை உருவாக்கினார்,
- மனுக்குலம் வளங்களின் உச்சப்பயனைப் பெறுவதுடன் வளங்களைப் பாதுகாத்து பராமரிப்பதும் அதன் கடமையாகும்.
- உலக வளங்களை, மனுக்குலத்தின் நன்மைக்காக அனைவருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.
- வளங்களை இறைதிட்ட விருப்புக்கு எதிராகப் பயன்படுத்துவதால் அழிவு ஏற்படுகிறது.
- இறை படைப்பான வளங்கள் திரும்பவும் முழு நிறைவடைய கடவுள் அருள் பொழிகிறார்.
- வளக்காப்புப் பணியில் ஈடுபடும் நிறுவனங்கள், இயக்கங்களுடன் இணைந்து செயல்பட்டு இறைவிருப்பத்தை நிறைவேற்றல் வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு**

1 உமது பிரதேசத்தில் வளங்கள் விரயமாக்கப்படும் நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றை தவிர்க்கக்கூடிய திட்டமொன்றை குழு நிலையில் தயாரிக்க.

2 "கடவுள் படைத்த வளங்களைப் பராமரிப்போம்" என்னும் தலைப்பில், கவிதை அல்லது நாடகம் எழுதுக.

3 இலங்கையில் வளப்பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் நிறுவனங்கள் பற்றியும், அவற்றின் பணிகளையும் அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கவும்.